[1982 பிப்ரவரி 5

திரு. ப. வெங்கடசுப்பிரமனியன் : பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற காலைநேர வகுப்புகளைத் தமிழகத்தில் அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் அரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மற்றக் கல்லூரிகளிலேயும் மாலை நேர வகுப்புகளுக்குப் போதுமான தேவையிருக்கும் என்ற நிலை இருக்குமேயானால், அதுபற்றி அந்தக் கல்லூரிகளிலிருந்து அவர்கள் பரிந்துரை செய்து பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினால் பல்கலைக்கழகம் அரசினுடைய நிலைகளை உணர்ந்து அவர்கள் அதற்கான அனுமதியைப் தருவார்கள்.

கெங்கவல்லி அரசினர் மேல் நிலைப்பள்ளி.

*வினா எண் 48—திருமதி தா. இராசாம்பாள் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ கெங்கவல்லி (சேலம்) அரசினர் மேல்நிலைப்பள்ளி பிரித்து பெண்களுக்கென தனி பள்ளி தொடங்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

(ஆ) இவ்வாண்டிலேயே (1981–82) இது நிறைவேற்ற படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1981 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ஆம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண். 1069-ல் கெங்கவல்லி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவியர்களை தனியே பிரித்து 1981–82 ஆம் ஆண்டில் பெண்களுக்கென தனியாக உயர் நிலைப்பள்ளி துவங்க அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி பள்ளி 15—7—1981 முதல் நடைபெற்று வருகிறது.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவரவர்களே இப்பள்ளியைத் துவங்கியதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் அங்கே உள்ள ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில், இருபது ஏக்கர் உள்ள இடத்தில் மோட்டாரைப்பொருத்திதோட்ட வேலையையும் ஆரம்பிப்பதற்குச் சாதகமானநிலைமைகள்இருக்கின்றன அங்கேகிணறும் உள்ளது. அதே நேரத்தில் பெண்கள் பயிலுகின்ற பள்ளிக்கும் காம்பவுண்ட் இல்லாமல் திறந்த வெளியாக இருக்கிறது. எனவே அங்கே சுற்றுச் சுவர் ஒன்றும் அமைத்தும் மோட்டார் அமைத்துத் தோட்ட வேலைகளுக்கான நிலைகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும், அவர்களுடைய சொந்த உபயோகத்திற்கும்

1982 பிப்ரவரி 5]

தண்ணீர் தேவைப்படுகிகிறது. எனவே, சுற்றுச் சுவருக்கும் தண்ணீருக்கும் இந்த நிதியாண்டிலேயே நிதி உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்பமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே பல்வேறு பள்ளிகளில் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து முன்னுரிமைப் பிரகாரம் வசதிகளைச் செய்து வருகிறோம். பல்வேறு பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றது ஆசையாகப் பல பள்ளிகளை ஆரம்பித்துவிட்டுப் போய்விட்டார்கள் முப்பது வருட காலத்தில் நாங்கள் வந்து 30 வருட காலத்தில் கட்டிடம் இல்லாத பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டித்தர வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் முன்னுரிமைப் பிரகாரம்தான் அந்த வேலைகளைச் செய்ய வேண்டும்.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பள்ளியை ஆரம்பிப்பதற்கென அரசு எந்த நிதி உதவியையும் செய்ய வேண்டியது இல்லாமல், கட்டிடங்கள், ஆசிரியர்கள், பர்னிச்சர்கள் ஆகிய அத்தனையும் இருக்கிறது ஆகவே, இதில் தனிக் கவனம் செலுத்தி பெண்கள் பயிலும் பள்ளி. ஊரை ஒட்டி இருப்பதால், பாதுகாப்புக்காகச் சுற்றுச்சுவரும், தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க அரசு உதவி செய்யுமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்பமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, எம்.எல்.ஏ. விற்குத் தங்கள் தொகுதியிலுள்ள பள்ளியைப் பற்றிய கவலை; அமைச்சருக்குத் தமிழ் நாட்டிலே உள்ள அத்தனை பள்ளிகளைப் பற்றியும் கவலை. இதுதான் கேள்வி—பதிலாக வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள சொன்னார்கள், முப்பதாண்டுக் காலத்திலே ஏதோ திறந்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று. ஆனால் தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சியிலே இருந்த பொழுது கல்விக்கண் கொடுத்தவர் காமராஜ் என்று சொல்லுமளவிற்கு அவர்கள் பள்ளிகளைத் திறந்து கொண்டு வந்தார்கள்.

ஆனால், திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு நிரந்தரமான கட்டிடங்கள் இல்லாமல் மாணவ மாணவியர் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவ்வாறு பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் உடனடியாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

[1982 பிப்ரவரி 5

மாண்பமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஒரு நிலைமையை எடுத்துச் சொன்னேனே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் போன்றவர்கள் அதிக அளவில் மக்கள் படிக்கவேண்டுமென்ற காரணத்தால் பள்ளிகளைத் திறந்தார்கள். அவ்வாறு திறக்கின்றபொழுது பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்களைப் பற்றி மதிப்பிடவில்லை. இப்பொழுது தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அத்தகைய பள்ளிகளுக்கான கட்டிடங்களைக்கட்டி வருகிறோம். இதில் உள்ள கஷ்டம் என்னவென்றால், பள்ளிகளைத் திறக்கும் பொழுது தேவயான கட்டிடங்களையும் கட்டியிருந்தால் உங்களிடத்திலே இப்பொழுது இவ்வளவு சிக்கலிலே மாட்டிக்கொண்டு பதில் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை.

விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரி.

*வினா எண் 49—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசினர் கலைக்கல்லூரியில் முதுநிலை பட்டப்படிப்புகள் (M.A., M.Sc., M.Com.) போன்றவைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

மாண்பமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ). தற்போது அவ்வாறு திட்டம் ஏதும் இல்லை எனினும் 1982–83 இல் புதிய பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு, வகுப்புகள் துவங்க இவ்வாண்டு அக்டோபர் மாத இறுதியில் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். கல்லூரி முதல்வரிடமிருந்து அப்பொழுது விண்ணப்பம் வந்தால் பரிசீலிக்கப்படும்.

முதல் நிலை இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர் மன்றங்களை ஒருங்கிணைக்கும் திட்டம்.

*வினா எண் 50—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்நிலை குற்றவியல் நடுவர் மன்றம் இரண்டாம் நிலை குற்றவியல் நடுவர் மன்றம் ஒருங்கிணைப்பு திட்டம் சம்பந்தமான அரசு ஆணை (G.O.) வழங்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) இல்லை எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?